# பாசம்

# 19

"கறுப்பி"

"சிவப்பி; வா!"

"வெள்ளைச்சி வா; இஞ்சை வா!"

காற்றிலே மிதந்து தேய்ந்தது அவனுடைய குரல். அந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தாது அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அவன் அழைப்பு அவர்களுடைய செவியிலே விழவில்லைப் போலும்!

"தண்ணி விடாய்க்குதா... தாறன்." அன்பு கலந்திருந்தது அந்தக்குரலில்.

தன் நிழல் தன் காலடியில் நிற்கும் நேரமது. வெங்கதிரோனுடைய கொடும் நாக்குகள் அந்த வெளியிலேயுள்ள சடப் பொருள்கள் எல்லாவற்றையும் நக்கி எரித்துக் கொண்டிருந்தன. செம்புழுதியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது சோளகக் காற்று.

அவனுடைய உதடு காய்ந்து வரண்டது. ஏதோ உருண்டு பிரண்டு குமட்டும் உணர்வு அடிவயிற்றில். அந்த நிலையிலும் அவனது வாய் "சிவப்பி! வெள்ளைச்சி" என்று கூறிக் கொண்டது. வளைந்து குனிந்து ஒரு கையால் வாளியை எடுத்தான் சின்னையா.

உழைத்து மெருகேறிய வைரம் பாய்ந்த தேகக்கட்டு. அதற்கேற்ற உயரம், வெயிலில் கருகி இருண்ட கறுப்பு நிறம். ஒளி வீசும் கண்கள். நீண்டு அடர்ந்து - நரைத்த புருவங்கள். தலையில் ஒரு பிடி பரட்டை செந்நிற மயிர், முழுக் கொட்டைப் பாக்கை வாயிற் போட்டு "டக்" கென்று கடித்துச் சப்பும் பற்கள். இவைகள் அமைந்து, எண்பது வயதை எட்டிய பிரகிருதிதான் சின்னையா.

தசரதனுக்கு நாலாயிரம் மனைவிமார் இருந்தார்களாம். வேறு பலருக்கு ஆயிரக் கணக்கில் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். அவையெல்லாம் புராணக் கதைகள். சின்னையாவுக்கோ 'கறுப்பி', 'வெள்ளைச்சி', 'சிவப்பி'... இப்படி...

நூற்றெட்டுப் பேர். அவர்கள்தான் அவனுக்குப் பிள்ளைகள். அவன் வாழ்வதும் அவர்களுக்காகத்தான்.

அவர்களுக்கு அவன்; அவனுக்கு அவர்கள்!

சின்னையா தனது பத்து வயதிலேயே அவர்களுடன் பழகத் தொடங்கியவன். அவர்களின் தாயாக - காவற்காரனாக, வைத்தியனாகவும் இருந்தான். 'கறுப்பி' 'வெள்ளைச்சி' களுடைய எத்தனையோ சந்ததிகளையும் கண்டு விட்டான்.

'கறுப்பி', 'வெள்ளைச்சி' அந்த இருபரம்பரைக்குமாகப் பாடுபட்டான்.

என்ன, மனிதர்களைப் போல் அவர்கள் நன்றி கெட்டவர்களா?



அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் அளித்தார்கள்; வாழ்க்கையையே கொடுத்தார்கள்.

சிறு வயதில் தந்தையை இழந்த சின்னையா, 'கறுப்பி' 'வெள்ளைச்சி'-களுடன் சேர்ந்து பாடுபட்டு உழைத்தான். அதன் பலனையும் அவனே அனுபவித்தான். பகல் முழுவதும் அந்த செம்பாட்டு வெயிலில் 'கறுப்பி' 'வெள்ளைச்சி' என்ற ஆடுகளுக்குப் பின்னால் திரிவான். இரவில் யாருடைய தோட்டத்துப் பட்டியிலாவது அடைத்து விட்டு அங்கேயே உறங்கிவிடுவான்.

விவாகஞ் செய்து குழந்தை குட்டிகளைக் கண்டவன்தான் சின்னையா. மனைவி, மகன் ஒருவனைக் கொடுத்துவிட்டுப் பரலோகம் சென்று விட்டாள். அப்போது மகனுக்கு வயது இரண்டு. அவனை வளர்த்து விவாகம் செய்து கொடுத்தான். அவன் பெற்றுப் பெருகி வாழ்கிறான்.

“வயது போன காலத்தில் இப்படி ஏன் அலைவான்?” என்று யாராவது கேட்டால் “என்ன செய்யிறது? நான் பாராவிட்டால் இந்த ஆடுகளின் கெதி என்ன? எங்களை வளர்த்தது இந்தத் தெய்வங்களெல்லோ?” என்ற பதிலைத்தான் சொல்லுவான்.

“அப்பு வயதுபோன நேரத்திலை இப்படி ஏன் அலையிறாய்?” ஆடுகளை வித்துவிட்டு நீ வீட்டிலை சும்மா இரு, சாப்பாடு தாறன்” என்று ஒருநாள் மகன் கேட்டான்.

“என்னடா சொல்லுறாய்? ஆடுகளை விக்கவா! அப்பிடியும் ஒரு நினைவா? என்ரை உயிர் உடலிலை இருக்கு மட்டும் அந்த நினைவை விட்டுவிடு”. ஆவேசமாக இரைந்தான் சின்னையா.

உப்புச் சத்தியாக்கிரகத்திற்குச் சென்ற மகாத்மா காந்தியைப் போல ஒரு கையில் ஒரு பொல்லுத் தடியுடன் நின்றான் சின்னையா.

அன்று, மண்ணில் குதித்த ஆட்டுக்குட்டியைத் தனது மார்புடன் அணைத்துக்கொண்டு நின்ற சின்னையாவைப் பார்த்தால் புத்தபிரானைப் போல் இருந்தது.

“வெள்ளைச்சி” என்று சொல்லிக்கொண்டு வாளியை எடுத்த சின்னையா-வினுடைய உடல் என்றைக்கும் இல்லாதபடி நடுங்கியது. தடியை ஊன்றிக்-கொண்டு ஒரு அடி எடுத்து வைத்தான். கால்கள் பதறின. உடல் தள்ளாடியது. தரையில் அப்படியே இருந்தான்.

சுற்றியுள்ள அனைத்தும் சுழன்றன.

அப்படியே மல்லாக்காக நிலத்தில் சாய்ந்தான்.

காற்று ஊளையிட்டுக் கொண்டு செம்புழுதியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது.

பனங்காடு ஓலமிட்டு அலறிக்கொண்டிருந்தது.

தொலைவில் ஆடுகள் வெண்திரைக்குப் பின்னுள்ள சிலையின் நிழலாயின.

“கறுப்பி” அவனுடைய வாய் முணுமுணுத்தது.

“ம்மேய்...” என்று கத்திக் கொண்டு சிவலை ஆடு துள்ளி விழுந்து அலறியது.

தலையை உயர்த்திச் சத்தம் வந்த திசையைப் பார்த்தான். ஒரு ஆடு துள்ளிக் குதித்துக் கொண்டு அலறியது. எந்த ஆடு என்று அவனுக்குத் தெரியவில்லை. அதன் நிறத்தைக் கூட அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி எழும்ப, யாரோ நெஞ்சில் ஏறியிருந்து அமுக்குவது போலிருந்தது அவனுக்கு.

தொப்பென்று முதுகு நிலத்தில் வீழ்ந்தது.

ஆடு துடித்துத் துடித்துக் கத்தியது.



“வெள்ளச்சி...” அவனுடைய உதட்டிலிருந்து நழுவியது சத்தம். தொண்டைக்குள் ஏதோ தடக்குவது போல இருந்தது. கழுத்தைப் பிடித்து நெரித்துத் திருகுவது மாதிரி...

இரண்டு கால்களையும் மடக்கி ஊன்றி நிமிர, பின் நாரி படீர் என விழுந்தது.

இரு கைகளும் நிலத்தில் விறாண்டிப் பிடித்தன.

“ம்மேய்... ம்மேய்...” என்ற சத்தம் அவனுடைய காதில் விழுந்து கொண்டிருந்தது.

கைகளையும் கால்களையும் நிலத்தில் அடித்தான்.

“கடவுளே என் ஆடுகளின் கதி?”

உடல் காற்றில் மிதப்பது போலிருந்தது.

“ம்மா...” சிவலை ஆட்டின் சத்தம் தேய்ந்து கொண்டு வந்தது.

“கறுப்...” உதடுகள் அசைந்தன; சத்தம் வெளிவரவில்லை.

குபீர்... அவனுடைய வாயாலும் மூக்காலும் இரத்தம் பீறீட்டுக் கொண்டு வந்தது. கண்கள் பிதுங்கி மேலே மேலே போய் மண்டைக்குள் சொருகின.

“கறுப்பி...” உதடுகள் அப்புறம் அசையவில்லை! அவனுடைய தலை சாய்ந்தது!

ஆடுகள் அலறிக் கொண்டு அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தன.

அவற்றின் உள்ளுணர்வுக்கு அந்த முதிர்ந்த கட்டையோடு ஒட்டியிருந்த உயிரைக் காணவேண்டுமென்ற துடிப்புண்டானதோ என்னவோ கட்டற்று அங்குமிங்கும் அலைந்தன.

“ம்மேய்! ம்மேய்!..” என்று ஓலமிட்டன, அந்த ஓலத்தில் குழைந்திருந்த சாயை, பாசத்தின் பரிமளிப்போ என்னவோ!

உலகத்தை ஆக்கிரமித்த சூரியன் அஸ்தமன கிரிக்குள் புகுந்து கொள்ளத் தொடங்கினான். எங்கும் சுற்றி வரும் இருளின் கருவண்ணத்துக்குள் இயற்கை மறையத் தொடங்கியது.

அந்த வெளியில் சலனமற்ற சடப்பொருளாகச் சின்னையா கிடந்தான். இருள் திரை அவனுடைய உடலையும் போர்த்திக் கொண்டது.

ஆடுகளின் ‘மேய்’ என்ற ஓலம் அந்த வெளியின் அமைதியைச் சாகடித்துப் பரவிக்கொண்டிருந்தது.



**நீர்வை பொன்னையன்**

## அரும்பதங்கள்

பிரகிருதி - விசித்திரமான படைப்பு
பரலோகம் - மேல் உலகம் / மோட்சம்
கிரி - மலை
அஸ்தமனம் - மறைவு



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

**01. பின்வருவன யாரால், யாருக்குக் கூறப்பட்டது என எழுதுக.**

1. *கறுப்பி சிவப்பி... வா... வெள்ளைச்சி! வா... இஞ்சை வா.....*
   *யார் கூறியது?*
   *யாருக்குக் கூறப்பட்டது?*
2. *வயதுபோன நேரத்திலை இப்படி ஏன் அலைகிறாய்...?*
   *யார் கூறியது?*
   *யாருக்குக் கூறப்பட்டது?*
3. *'என்னடா சொல்லுறாய் ஆடுகளை விக்கவா, அப்படியும் ஒரு நினைவா?' யார் கூறியது?*
   *யாருக்குக் கூறப்பட்டது?*

**02. பூரண வாக்கியங்களில் விடை தருக**

1. *கறுப்பி, வெள்ளைச்சி, சிவப்பி என்பனவற்றின் மீது கதை நாயகன் கொண்டுள்ள பாசம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.*
2. *தமது மேய்ப்பரின் இழப்பை ஆடுகள் எவ்வாறு வெளிப்படுத்தின.*
3. *கதா நாயகனின் பாச உணர்வை கதாசிரியர் எவ்வாறு விபரிக்கின்றார்?*
4. *'எங்களை வளர்த்தது இந்த தெய்வங்களல்லோ' என்ற கூற்று எதனை உணர்த்துகிறது.*
5. *இச் சிறுகதையில் கூறப்படும் விழுமியங்களை எழுதுக.*
6. *பண்டைய காலந்தொட்டு மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்து எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : பாடத்தை வாசித்து மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள உறவு பற்றிய உமது கருத்தினை குழுவினருக்குக் கூறுக.

செயற்பாடு 2 : கதாசிரியர் இவ்வகையான ஒரு கதை எழுதுவதற்கான காரணங்களை ஆசிரியரிடம் வினவி விடை காண்க.

செயற்பாடு 3 : இச்சிறுகதை கூறும் செய்தி நடைமுறையோடு எவ்வாறு தொடர்புறுகிறது என்பதை குழுவினருடன் கலந்துரையாடுக.

செயற்பாடு 4 : சோடியாகச் செயற்பட்டு, பாடத்தில் வரும் பேச்சுவழக்குச் சொற்களை கண்டறிந்து அதற்குரிய எழுத்து வழக்கு தமிழ் வடிவத்தை எழுதுக.

செயற்பாடு 5 : நீர் கற்றுச் சுவைத்த விடயங்கள், நாட்டு நடப்புகள், படிப்பினைகள், அன்றைய நாளின் முக்கிய நிகழ்வுகள் முதலியவற்றை தினக்குறிப்பாக எழுதுக.

செயற்பாடு 6 : பாசம் என்ற கருத்தை மையமாகக் கொண்டு நாடகம் ஒன்று எழுதுக.

# மொழிவளம்

## ▶ பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

பிறருடன் உரையாடுவதற்குப் பேச்சு வழக்கைப் பயன்படுத்துகின்றோம். இதற்கென்று தமிழில் இலக்கணங்கள் எதுவும் இதுவரை எழுதப்படவில்லை. ஆனால் எழுத்துத் தமிழுக்கு இலக்கணம் உண்டு.

மாணவர்கள் தாம் ஆக்கும் வாக்கியங்கள், கடிதங்கள், கட்டுரைகளை எழுத்து வழக்கில் எழுதும் போது அவை அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு. |
|---|---|
| அப்ப | அப்போது |
| மூஞ்சி | முகம் |
| அங்க | அங்கு / அங்கே |
| எங்கட | எங்களுடைய |
| தாருக்கு | யாருக்கு |
| நா வரமாட்டன் | நான் வரமாட்டேன் |
| வெள்ளென / காலம | காலையில் |
| நாங்க | நாங்கள் |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை |
| இளனி | ஈழநீர் |
| கிடா | கடா |
| புட்டு | பிட்டு |
| வெத்திலை | வெற்றிலை |
| பேந்து | பின்பு , பின்னர் |

## பயிற்சி

01. உங்களது நண்பர்களுடன் உரையாடுங்கள். அவர்களது பேச்சு வழக்கில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்கள் சிலவற்றை தொகுத்து எழுதுங்கள்.

02. பின்வரும் உரைநடையில் இடம் பெறும் பேச்சு வழக்குச் சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.

“எங்கடா இன்னொரு எரும. அந்த தடியனை எழுப்பு. ஏய் விடியா மூஞ்சி..... மஞ்சத் தண்ணிய தெளிச்சு வாசலைக் கூட்டு...... நீ போயி பத்திய கொளுத்தி படத்துக்கு நேரே வையி... என்னா டீ மேக்கர்! பொய்லர் சூடாயிருச்சா... ஒரு பிளேண்டி போடு....”

மு. சிவலிங்கம் -(மலைகளின் மக்கள்)

## ▶புணர்ச்சி

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வெண் | + | மணல் | = | வெண்மணல் |
| காலை | + | கூட்டம் | = | காலைக்கூட்டம் |
| கடல் | + | கரை | = | கடற்கரை |

வெண் என்ற சொல்லும் மணல் என்ற சொல்லும் இணைந்து வெண் மணல் என்ற சொல்லாக உருவாகியுள்ளது.

காலை என்ற சொல்லும் கூட்டம் என்ற சொல்லும் இணைந்து காலைக்கூட்டம் என்ற சொல் உருவாகியுள்ளது.

கடல் என்ற சொல்லும் கரை என்ற சொல்லும் இணைந்து கடற்கரை என்ற சொல் உருவாகியுள்ளது.

இவ்வாறு இரு சொற்கள ஒன்றாகச் சேருவதனை அல்லது இணைவதனைச் **சொற்புணர்ச்சி** என்பர்.

பின்வரும் வாக்கியங்களைக் கவனிப்போம்.

★ குருவி பறந்து சென்றது.
★ குருவி கூடு கட்டியது.
★ குருவிக் கூடு அழகாக இருந்தது.

குருவி என்ற சொல்லும், கூடு என்ற சொல்லும் தனித்திருக்கும்போது தரும் பொருளுக்கும் குருவி + கூடு = குருவிக்கூடு என்று இணைந்திருக்கும்போது தரும் பொருளுக்குமிடையே வித்தியாசம் உண்டு.

குருவி என்ற பறவையைப் பற்றி முதலாவது வசனம் விளக்குகின்றது. பறவையையும் அது உருவாக்கிய கூடு என்ற ஒன்றையும் பற்றி இரண்டாவது வசனம் விளக்குகின்றது. மூன்றாவது வசனம் குருவியினால் கட்டப்பட்ட கூட்டை பற்றி மட்டுமே விளக்குகிறது.

ஆகவே சொற்புணர்ச்சி கருத்து வேறுபாட்டைத் தரும் என்பது தெளிவாகிறது.

சொற்புணர்ச்சியை இருவகைகளாக வகைப்படுத்துவர். அவையாவன-

1. இயல்புப் புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி

## இயல்புப் புணர்ச்சி

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்

| | | | | |
|---|---|---|---|---|
| நாம் | + | நண்பர்கள் | = | நாம் நண்பர்கள் |
| வீடு | + | பெரியது | = | வீடு பெரியது. |

இவ்வாறு இரு சொற்கள் புணரும்போது அவற்றின் வடிவத்தில் எவ்விதமான மாற்றமும் இன்றிப் புணர்வது **இயல்புப் புணர்ச்சி** எனப்படும்.

முதலாவதாக நிற்கும் சொல்லுடன் (நிலை மொழியுடன்) இரண்டாவதாக நிற்கும் சொல் (வருமொழி) இணையும்போது, அவற்றின் வடிவத்தில் எவ்விதமான வேறுபாடுமின்றிப் புணர்வது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

| நிலை மொழி | | வருமொழி | |
|---|---|---|---|
| மாடு | + | கள் | = மாடுகள் |
| நாய் | + | வால் | = நாய்வால் |
| அடுப்பு | + | நெருப்பு | = அடுப்பு நெருப்பு |

## பயிற்சி

**01. பின்வரும் வசனங்களில் சேர்ந்திருக்கும் சொற்களை இனங்கண்டு எழுதுக.**

1) நாங்கள் வெண்கட்டியை எடுத்தோம்.
2) மாலா காலைக்கூட்டத்திற்கு வரவில்லை.
3) கூட்டிலிருந்து குருவிக் குஞ்சுகள் பறந்தன.
4) பாத்திமா பாடப்புத்தகத்தைக் கொண்டு வந்தாள்.

**02. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1) வாழை + இலை =
2) கருமை + நிறம் =
3) அரிசி + மா =
4) இடி + ஓசை =
5) தமிழ் + மொழி =


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக